# அன்பின் நீளம் கால் முழம்

## (ஹைக்கூ கவிதைகள்)



ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம்

# அன்பின் நீளம் கால் முழம்

(ஹைக்கூ கவிதைகள்)



ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | **அன்பின் நீளம் கால் முழம்** (*ஹைக்கூ கவிதைகள்*) |
| ஆசிரியர் | : | ***ஆழ்வார்குறிச்சி* ப.சொக்கலிங்கம்**<br>62, விக்டோரியா கார்டன்ஸ்<br>20, ஜவஹர்லால் நேரு சாலை<br>கோயம்பேடு, சென்னை - 600 107.<br>அலைபேசி: 99400 84290<br>மின்னஞ்சல்: chockalingam66@gmail.com |
| முதல் பதிப்பு | : | மே 2024 |
| அச்சிட்டு வெளியிடுபவர் | : | ஆழ்வார்குறிச்சி ப. சொக்கலிங்கம் |
| ஓவியங்கள் | : | திருமதி. காந்திமதி ரெங்கநாதன் |
| நூல் கிடைக்குமிடம் | : | ஆழ்வார்குறிச்சி ப. சொக்கலிங்கம்<br>62, விக்டோரியா கார்டன்ஸ்<br>20, ஜவஹர்லால் நேரு சாலை<br>கோயம்பேடு, சென்னை - 600 107. |
| வடிவமைப்பு & அச்சாக்கம் | : | திரு. சி. பிரேம் ஆனந்த்<br>முத்து நாகா பிரிண்டர்ஸ்<br>மதுரை - 625 001.<br>செல்: 94420 84400 |
| விலை | : | ரூ.250 |
| தாள் | : | 80 ஜிஎஸ்எம் |

ISBN NO: 978-93-340-6470-4

# வாழ்த்துரை

ஹைஹைக்கூ வானில் சிறகு விரிக்கும் ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம் **“அன்பின் நீளம் கால் முழம்”** என்று சொல்கிறார்.

ஹைக்கூ ஆழம் எவ்வளவென்று கற்றுக் கொள்ளும் ஆசை உடைய இவர் வளர்வார்.

தமிழ் ஹைக்கூக் கவிஞர்களிடையே மூவடி நாயகனாக முன்னேறுவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

ஜப்பானியர் வரவேற்கும் தமிழ் ஹைக்கூக் கவிதைகள் படைக்க வாழ்த்துகிறேன்.

ஈரோடு **தமிழன்பன்**
சென்னை
22.05.2024

# அணிந்துரை

## இயல்பில் துளிர்த்த ஈரக் கவிதைகள்

**- மு. முருகேஷ்**

பற்றிக்கொள்ள கொம்பேதுமின்றி அலையும் கொடியெனச் சிறிய வயதிலேயே பெற்றோரை இழந்து பரிதவித்த அந்தச் சிறுவன் ஜென் மடாலயம் ஒன்றில் அடைக்கலமானான்.

சில நாட்களிலேயே மடாலயத்திலுள்ள எல்லா வேலைகளையும் மிகுந்த ஈடுபாட்டோடும் அக்கறையோடும் செய்யப் பழகிக்கொண்டான். யார் கேட்டாலும் மறுக்காமல் உதவிகளைச் செய்தான். சிரித்த முகமாய் எப்போதும் மடாலயத்தைச் சுற்றியே வலம் வந்தான். அந்தச் சிறுவனுக்கான உலகமாக மாறிப்போனது மடாலயம்.

ஜென் குரு பேசும்போது, அவரது வார்த்தைகளைக் கூர்ந்து கவனித்தான். பலரும் குருவிடம் கேள்விகளைக் கேட்பார்கள். குருவும் அதற்குப் பதிலளிப்பார். அந்தச் சிறுவன் மட்டும் ஒரு நாளும் குருவிடம் கேள்வியெதுவும் கேட்காமலிருந்தான்.

அந்தச் சிறுவனின் மனதில் அடிக்கடி கேள்வியொன்று எழும். ஆனாலும் தன் கேள்விக்கான பதிலைத் தேடாமல் தனக்குள்ளேயே அந்தக் கேள்வியைப் புதைத்து வைத்தான். அந்தக் கேள்வியெழுப்பும் யோசனையோடு சில நேரங்களில் அப்படியே வானம் பார்த்தபடி நின்றிருப்பான்.

“என்னாச்சு..?” என்று யாராவது கேட்டால், “ஒன்றுமில்லை” என்பான். அவன் மனசுக்குள் சுருண்டு படுத்திருந்த அந்தக் கேள்வி அடிக்கடி தலை தூக்கியெழும். அப்போதெல்லாம் சிறுவன் மனம் சற்றே குழம்பமடையும்.

ஒரு நாள் ஜென் குருவிடம் சென்று முறையிட்டான்.

“உன்னைக் குடைந்தெடுக்கும் அந்தக் கேள்வி என்ன?” என்று கேட்டார் ஷென் குரு.

“அன்பென்றால் என்ன… குருவே?” என்றான் சிறுவன்.

ஜென் குரு சற்றுநேரம் அமைதியாக இருந்தார். குருவின் பதிலைக் கேட்க ஆர்வத்தோடு நின்றிருந்தான் சிறுவன்.

அப்போது தோட்டத்தில் ஏதோ சத்தம் கேட்டது. குருவின் முன்னே பணிந்து நின்றிருந்த சிறுவன், வேகமாகத் தோட்டத்திற்கு ஓடினான். சற்று நேரத்தில் திரும்பி வந்தான்.

“என்னாயிற்று..?” என்று கேட்டார் குரு.

”அணில் குஞ்சொன்று மரக்கிளையிலிருந்து கீழே விழுந்துவிட்டது… குருவே. அதை எடுத்து மீண்டும் கிளையில் பத்திரமாக வைத்துவிட்டு வந்தேன்!” என்றான்.

“அப்படியா… சரி. நீ போகலாம்” என்றார் குரு.

“என் கேள்விக்குப் பதில்..?” தயக்கத்துடனே கேட்டான் அந்தச் சிறுவன்.

“சக உயிர்களின் மேல் அன்பு செய்யத் தெரியாத மனித மனங்களில் ஈரம் சுரப்பதில்லை. நீ அன்பே உருவான மனிதனாக இருக்கிறாய். எல்லோரையும் நேசிக்கிறாய். யாருக்கேனும் சிறு துன்பம் வந்தாலும் ஓடிச்சென்று உதவுகிறாய். நீ நீயாய் உன் இயல்பில் இருப்பதே அன்பு. அப்படியே இரு..!” என்று ஜென் குரு சொல்ல, அந்தச் சிறுவனின் கண்களை நீர் திரையிட்டது.

முன்பே ஐந்து கவிதை நூல்களை வெளியிட்டிருக்கும் கவிஞர் ப.சொக்கலிங்கம், தனது ஆறாவது நூலாக ‘**அன்பின் நீளம் கால் முழம்**’ எனும் ஹைக்கூ நூலைத் தந்திருப்பதில் பெருமகிழ்ச்சி எனக்கு.

சென்னைப் புத்தகக் காட்சியில் இருமுறை கவிஞர் ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கத்தை நான் சந்தித்திருக்கிறேன். கவிஞரது ஐந்தாவது கவிதை நூலான **‘சிட்டுக்குருவி’** எனக்கு மிகவும் பிடித்த நூல். அந்த நூலிலிருந்த பல சிறு கவிதைகள் எனக்குப் பிடித்த கவிதைகள்.

‘சிட்டுக்குருவி’ நூலைப் பற்றிய சிறு அறிமுகத்தை ‘இந்து தமிழ் திசை’ நாளிதழில் எழுதினேன். வார்த்தைகளை அதன் பொருளறிந்து சரியான இடத்தில் மிகப் பொருத்தமாகக் கையாளும் கவிஞரது கரங்களுக்கு ஹைக்கூ கவிதைகளும் மிக அழகாகக் கைவரப்பெற்றுள்ளது என்பதை இந்த நூலைப் படித்த கணத்தில் உணர்ந்துகொண்டேன்.

சொற்களாலானதே கவிதையென்றாலும் எல்லாச் சொற்களுமே கவிதையாகி விடுவதில்லை. நல்ல கவிதைக்கான தேடல் ஒரு கவிஞனுக்குள்ளிருந்தாலே போதும்; அந்தக் கவிதை, தனக்குப் பொருத்தமான சொற்களைத் தானே தேடிக்கொள்ளும் என்பார்கள். ஹைக்கூவில் இது நூறு சதவீதம் உண்மை என்றே சொல்வேன்.

அதனதன் இயல்பில் இயங்கிக்கொண்டிருக்கும் இப்பூமியை, அதன் இயல்பிலேயே எழுதும்போது ஹைக்கூவின் அழகும் அர்த்தமும் பன்மடங்கு கூடிவிடுகிறது. அப்படியான ஈர்ப்புமிக்க பல கவிதைகளால் இந்த நூலை செறிவாக்கித் தந்துள்ளார் கவிஞர் ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம்.

***‘யானை***
***தொடரும்***
***காடு’***

வெறும் மூன்றே வார்த்தைகள் தான். ஆனால், இந்த மூவரிகள் வாசகருக்குள் உண்டாக்கிச் செல்லும் தாக்கம் பெரியது. ‘காடறிய யானையாக வேண்டும். யானையை அறிய காடாகி விடு’ என்று சொல்வதைப் போலுள்ளது இந்தக் கவிதை.

***‘வேடன் வீட்டில் விருந்து***
***கூடு திரும்பவில்லை***
***பறவை’***

வெகுநேரம் என் யோசனைக்குள் சுற்றிவந்த கவிதைகளுள் இதுவுமொன்று. இப்படியாக இருக்குமோ... இல்லை... அப்படியாக இருக்குமோ என்று என் மனம் திரும்பத்

திரும்பச் சமாதானமாகாமல் கேள்விகளால் துளைத்தெடுத்தது. நீங்கள் உங்கள் சிந்தனைக்கேற்ப யோசித்துக் கொள்வீர்கள் என்பதால் நான் சற்றே விலகி நிற்கிறேன்.

வாசக மனத்திரையில் காட்சிகளை சித்திரங்களாகத் தீட்டிச்செல்வது சிறந்த ஹைக்கூவின் பண்பாகும். அப்படியான ஒரு காட்சி ஓவியமென மலர்ந்துள்ளது இக்கவிதை;

*'நீந்திச் சென்றது பாம்பு*
*தடத்தை*
*அழிக்கும் குளம்'*

பலமுறை வாசித்து ரசித்த தேர்ந்த ஹைக்கூவிது.

இன்னொரு கவிதை பற்றியும் சொல்ல வேண்டும்.

*'தோட்டக்காரன் பணி*
*வியர்த்திருந்தன*
*இலைகள்'*

இப்படியாக, இந்த நூலில் பல கவிதைகள் கவிஞரது கவித்திறனை சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றன.

நீர்த்திவலையினால் மாடிக்கட்டிடத்தில் கூனிய புல்லும், கரைமரத்து வேர்கள் அந்தரத்தில் புதையாமலிருப்பதும், அண்டை மாநிலத்தில் கட்டிய வீட்டில் சொந்த ஊர் ஆற்றின் வாசம் வீசுவதும் தமிழ் ஹைக்கூவிற்கு வளம் சேர்க்கும் புதிய வரவுகளெனக் கொள்ளலாம்.

கவிஞர் ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கத்தின் ஹைக்கூ கவிதைகளுக்கு அழகான ஓவியங்களை வரைந்தளித்திருக்கும் கவிஞரது சகோதரி திருமதி. காந்திமதி ரெங்கநாதனின் கோட்டோவியங்களையும் ரசித்துப் பார்த்தேன்.

‘இயல்பில் இரு’ என்பதைத்தான் ஜென் சொல்கிறது; அதையே தான் ஹைக்கூவும் பதிவு செய்கிறது. தன் வாழ்வியல் அனுபவத்தின் இயல்பில் துளிர்த்த ஈரக் கவிதைகளை அழகானதொரு சரமாக்கித் தந்துள்ளார் அன்புக்கவிஞர் ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம்.

*‘அன்பின் நீளம் கால் முழம்*
*பூ விற்கும் பெண்*
*முழம் போடுகையில்’*

- என்றெழுதியிருக்கும் கவிஞர், ஹைக்கூவிற்குப் பொருத்தமான வகையில், தேவையை அறிந்து அதற்கேற்ப வார்த்தைகளைக் கோர்த்துக் கவிதையாக்கியுள்ளார். முழம் அல்ல... படிக்கப் படிக்க நீண்டு செல்கிறது... அன்பின் நீளமும் கவிஞரது கவிதையின் ஆழமும்.

தென்தமிழகத்தின் ஆழ்வார்குறிச்சியில் பிறந்து, நெல்லை, சென்னை, கொல்கத்தாவில் பட்டப்படிப்புகளை முடித்து, இன்றைக்குத் தலைநகர் சென்னையில் இன்ஜினீயரிங் நிறுவனமொன்றை நடத்தி வருகிற கவிஞர் ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம், கவிதைத் தளத்திலும் தனக்கான இடத்தினை உறுதியாக நிறுவியுள்ளார்.

இன்னும் பல ஹைக்கூ நூல்களைப் படையுங்கள். தமிழ் ஹைக்கூவின் உயரங்களை அடையுங்கள்.

அன்பினிய கவிஞருக்கு எனது பேரன்பின் வாழ்த்துகள்.

15.05.2024

**மு. முருகேஷ்**
முதுநிலை உதவி ஆசிரியர்,
‘இந்து தமிழ் திசை’ நாளிதழ்,
சென்னை - 600 002.

# நன்றியுரை

என் ஆறாவது கவிதைத் தொகுப்பாக, “**அன்பின் நீளம் கால் முழம்**” எனும் தலைப்பில் வெளிவந்துள்ள என் முதல் ஹைக்கூ கவிதைத் தொகுப்பை நீங்கள் தேர்ந்தெடுத்தமைக்கு நன்றி.

என் இந்த முயற்சிக்கு, மகாகவி ஈரோடு தமிழன்பன் அவர்களின் வாழ்த்துரை கிடைக்கப் பெற்றது நான் பெற்ற பேறு. மகாகவி அவர்களின் அருமையான வாழ்த்துரைக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.

கவிஞர் மு. முருகேஷ் அவர்கள் ‘இந்து தமிழ் திசை’ நாளிதழில் முதுநிலை உதவி ஆசிரியராகப் பணிபுரிகிறார். குழந்தை இலக்கியப் படைப்பாளி, கவிஞர், எழுத்தாளர், சிற்றிதழ் ஆசிரியர், ஹைக்கூ கவிஞர், கல்வி ஆலோசகர், பதிப்பாசிரியர் எனப் பன்முகங்களுடன், சமூகம், கல்வி மற்றும் இலக்கியப் பணிகளில் ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளைச் செய்து வரும் படைப்பாளியாகவும் முப்பதாண்டு காலமாகத் தொடர்ந்து இயங்கி வருகிறார். சாகித்ய அகாடமி குழந்தை இலக்கியப்பிரிவில் வழங்கப்படும் பாலபுரசுகார் விருதை, 2021 ஆம் ஆண்டு பெற்றுள்ளார். வளரும் கவிஞர்களை ஊக்குவித்து ஆதரிப்பவர். **“இயல்பில் துளிர்த்த ஈரக்கவிதை”** எனும் தலைப்பில் அருமையான அணிந்துரை எழுதிய அன்பிற்கினிய நண்பர் கவிஞர் மு.முருகேஷ் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றி.


அனைத்து கவிதைகளுக்கும் பொருத்தமான ஓவியங்கள் மற்றும் நேர்த்தியாக அட்டைப்படம் வரைந்து தந்துள்ள என் சகோதரி திருமதி.காந்திமதி ரெங்கநாதன் அவர்களுக்கு என் நன்றி. 1970, 80 களில், எங்கள் இருவரின் பால்யகாலம், குற்றாலத்திற்கும், பாபநாசத்திற்கும் இடையே மேற்குத் தொடர்ச்சி மலையடிவாரத்தில் அமையப் பெற்ற, கல்வி, விவசாயம், ஆன்மீகம் போன்ற துறைகளில் மேலோங்கி நிற்கும், எழில் கொஞ்சும் ஆழ்வார்குறிச்சியில் கழிந்தது. எங்கள் இருவரின் பால்யகால நினைவுகள், என் சகோதரியின் ஓவியங்களாகவும், என் எழுத்துக்களாகவும் இந்நூலில் இடம் பெற்றுள்ள பல கவிதைகளில் வெளிப்பட்டுள்ளன.

வழக்கம்போல இந்தநூலையும் நேர்த்தியாக வடிவமைத்தது, அச்சிட்டுத் தந்த திரு.சி.பிரேம் ஆனந்த், முத்து நாகா பிரிண்டர்ஸ், மதுரை அவர்களுக்கு என் நன்றி.


தொடர்ந்து என்னை ஊக்கப்படுத்தி வரும் நண்பர்கள், உறவினர்கள், வாசகப் பெருமக்கள் ஒவ்வொருவருக்கும் என் மனமார்ந்த நன்றி.

22.05.2024

**ஆழ்வார்குறிச்சி ப.சொக்கலிங்கம்**
சென்னை




*குடை போல் சுருண்டு*
*கிடந்த மனது*
*மழை வரும் வரை*



# யானை
# தொடரும்
# காடு



***இன்னிசை மொழியில்***
***காற்றின் பிரியாவிடை***
***புல்லாங்குழல்***



***ஒளித்து வைத்தக்***
***குற்றம்***
***சீவப்படுகிறது சிரசு***